பக்கங்கள்:-18

# காலை முரசு

| முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2056 | பங்குனி 10 | திங்கட்கிழமை | 24.03.2025 | அதிர்வு 231 |
|---|---|---|---|---|---|

## வெடிமருந்து, துப்பாக்கியுடன் இளைஞர்கள் இருவர் கைது!



வெடிமருந்து மற்றும் துப்பாக்கியுடன் இளைஞர்கள் இருவர் வெவ்வேறு இடங்களில் கைது செய்யப்பட்டுள்ளனர் 07



## இரட்டை வேடம் போடுகின்றார் ஜனாதிபதி

### தையிட்டி போராட்டக் களத்தில் கஜேந்திரன் எம்.பி. குற்றச்சாட்டு

(எஸ்.நிதர்ஷன்)

“ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க ஒருபுறத்திலே தான் இனவாதம், மதவாதத்துக்கு இடமளிக்க மாட்டேன் என்று சொல்லிக்கொண்டு தமிழர் தேசத்தில் மேலும் மேலும் பௌத்த விரிவாக்கல் நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றார்.”

– இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன் குற்றஞ்சாட்டினார்.

தையிட்டி திஸ்ஸ விகாரை வளாகத்துக்குள் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டதாகக் கூறப்படும் மற்றொரு கட்டடம் நேற்று ஞாயிற்றுக்கிழமை திறந்து வைக்கப்பட்டது. இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி நேற்று போராட்டத்தை முன்னெடுத்தது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:- 07

# அநுர அரசுக்குத் தக்க பாடம் புகட்டுவோம்! சகல சபைகளிலும் ஆட்சி அமைப்போம்!!

### வடக்கு, கிழக்கில் தமிழரசுக் கட்சியை வீழ்த்தவே முடியாது என்று நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் சூளுரை



“நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலில் அநுர அரசுக்குத் தமிழ் மக்கள் சிறந்த பாடத்தைப் புகட்டுவார்கள். எமது மக்களின் ஆணையுடன் வடக்கு, கிழக்கில் உள்ள அனைத்து சபைகளிலும் ஆட்சி அமைப்போம்.”

– இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தெரிவித்தார். 05



கிளிநொச்சியைச் சேர்ந்த

## குடும்பஸ்தர் ஒருவர் காய்ச்சலால் மரணம்

(எஸ்.ரகுதீஸ்)

காய்ச்சலால் பீடிக்கப்பட்டிருந்த குடும்பஸ்தர் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். 07

## மன்னார், பூநகரி சபைகளுக்கான வேட்புமனுத் தாக்கல் இன்று ஆரம்பம்



மன்னார், பூநகரி மற்றும் தெஹியத்தகண்டி பிரதேச சபைகளுக்கான வேட்புமனுக்கள் தாக்கல் இன்று திங்கட்கிழமை ஆரம்பமாகின்றது.

அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள் எதிர்வரும் வியாழக்கிழமை நண்பகல் 12 மணி வரை வேட்புமனுக்களை சமர்ப்பிக்க முடியும்.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் எதிர்வரும் மே 6ஆம் திகதி நடைபெறவுள்ளது. 07




ஓரிரு தினங்களுக்கு முன்னர் தமிழ் சட்டத்துறை விற்பன்னர் ஒருவர் (சுமந்திரன் அல்லர்) தொலைபேசி அழைப்பு எடுத்தார். இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழு தலைவர் சிறிதரன் பட்டலந்த வதை முகாம் பற்றிய ஜனாதிபதி விசாரணை ஆணைக் குழு தொடர்பில் நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரை பற்றி அவர் பிரஸ்தாபித்தார்.

அப்போது அவர் சொன்ன கருத்தையும், அதையொட்டி புதிதாக சில விடயங்களையும் வாசகர்களுடன் பகிர்வதற்காக இன்றைய பத்தியைப் பயன்படுத்தலாம் என்று நினைக்கிறேன்.

கதிர்காமத்து அழகி பிரேமாவதி மனம்பேரி, இசைப்பிரியா, கிருஷாந்தி குமாரசாமி போன்றோரின் படுகொலைகள் குறித்து தமது உரையில் குறிப்பிட்ட சிறிதரன், அந்த அட்டூழியங்களுக்கு நீதி வேண்டும் என்று தாங்கள் தொடர்ந்து போராடுகிறோம் என்ற சாரப்படக் கருத்துத் தெரிவித்திருக்கின்றார்.

அந்த விடயத்தைத்தான் மேற்படி 06

# ஐ.எம்.எவ்வின் தேவைக்காக தயாரிக்கப்பட்டுள்ள ‘பட்ஜட்’

## இப்படிச் சாடுகின்றார் நாமல் எம்.பி.



“சர்வதேச நாணய நிதியத்தின் தேவைக்கமையவே இவ்வாண்டுக்கான வரவு – செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது. மாறாக நாட்டிலுள்ள எந்தவொரு பிரதான பிரச்சினைக்கும் அதில் தீர்வுகள் முன்வைக்கப்படவில்லை. முன்மொழியப்பட்டுள்ள வேலைத்திட்டங்களும் எந்தளவுக்கு நடைமுறை சாத்தியமானது என்பது சந்தேகத்துக்குரியது.”

– இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

அம்பாந்தோட்டை பிரதேசத்தில் நேற்று ஞாயிற்றுக் கிழமை நடைபெற்ற மக்கள் சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும்போது இதனைத் தெரிவித்த அவர், மேலும் குறிப்பிடுகையில்,

“வரவு – செலவுத் திட்டத்துக்கு எதிராகவே நாம் வாக்களித்தோம். அதிலுள்ள வேலைத்திட்டங்களை நடைமுறைப் படுத்துவது நடைமுறைச் சாத்தியமானதா என்பது சந்தேகத்துக்கிடமானது.

வரி வருமானம் மற்றும் கடன் பெறுவதைத் தவிர அரசிடம் வேறு எந்த மாற்றுத்திட்டமும் இல்லை. தொழில் வாய்ப்பின்மை உட்பட நாட்டிலுள்ள எந்தவொரு பிரதான பிரச்சினைக்கும் இந்த வரவு – செலவுத் திட்டத்தில் தீர்வு முன்வைக்கப்பட வில்லை.

மாறாக முற்று முழுதாக சர்வதேச நாணய நிதியத்தின் தேவைக்கமையவே இந்த வரவு – செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கின்றது. அரச நிர்வாகம் தொடர்பில் அரசு இன்னும் அவதானத்துடன் செயற்பட வேண்டும்.

அரசிலுள்ள அமைச்சர்களுக்கு நாடாளுமன்றத்துக்குள் பொய் கூறும் உரிமை நீக்கப்பட வேண்டும்.

நாடாளுமன்றத்தில் தனிநபர் பிரேரணையாக இதற்கான யோசனையையும் முன்வைப்பதற்கும் நாம் தயாராக இருக்கின்றோம். கிராம மட்டத்தில் ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுன மிக வேகமாகப் பலமடைந்து வருகின்றது.

கடந்த காலங்களில் எம்மிலிருந்து பிரிந்தவர்கள் மீண்டும் கட்சியில் இணைகின்றனர். நாம் மக்களிடம் பொய் கூறி அவர்களை ஏமாற்றவில்லை.

நாம் ஒரே கொள்கையைப் பின்பற்றி வருகின்றோம். சந்தர்ப்பவாத அரசியலுக்காக நாம் எமது கொள்கைகளை மாற்றிக் கொள்ளவில்லை. கட்சி ஆதரவாளர்கள் தற்போது அதைப் புரிந்துகொண்டுள்ளனர்.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் ஊடாக மீண்டும் கட்சியை உயர் நிலைக்குக் கொண்டு செல்ல முடியும் என்ற நம்பிக்கை எமக்கு இருக்கின்றது.” – என்றார்.



# மாணவர்களின் புத்தகப்பையின் சுமை அதிகரிப்பால் உடல்நலப் பிரச்சினைகளுக்கு உள்ளாகின்றனர்

பாடசாலை மாணவர்களின் புத்தகப்பைகளின் சுமை அதிகரிப்பால் மாணவர்கள் மத்தியில் பல உடல்நலப் பிரச்சினைகள் எழுந்துள்ளதாக மருத்துவ மற்றும் சிவில் உரிமைகளுக்கான வைத்தியர்கள் சங்க கூட்டமைப்பின் தலைவர் வைத்திய நிபுணர் சமல் சஞ்சீவ தெரிவித்துள்ளார்.

உலக சுகாதார ஸ்தாபனத்தின் அளவுகோல்களின்படி, ஒரு புத்தகப்பையின் சுமை மாணவர் ஒருவரின் நிறையிலிருந்து 15 முதல் 20 சதவீதம் வரை இருக்க வேண்டும்.

குறித்த பிரச்சினை தொடர்பில் அவ்வப்போது விவாதங்கள் நடத்தப்பட்டாலும், சுகாதார அமைச்சு மற்றும் கல்வி அமைச்சு ஆகியவற்றால் உரிய நடவடிக்கையை எடுக்க முடியவில்லை.

இதன் காரணமாக, பாடசாலை மாணவர்களிடையே முதுகுத்தண்டு வலி, தலைவலி ,கழுத்து வலி மற்றும் நரம்பு தொடர்பான கோளாறுகள் போன்ற பிரச்சினைகள் அதிகரித்துள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வாக்குச்சீட்டு அச்சிடும் பணி ஆரம்பம்

2025 ஆம் ஆண்டு உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வாக்குச்சீட்டுகளை அச்சிடும் பணிகளை நேற்று முதல் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

மாவட்டச் செயலகங்களிலிருந்து பெறப்படும் வரிசையில், வாக்குச் சீட்டுகள் தொடர்பான விபரங்கள் அச்சகத்திற்கு அனுப்பப்படும் என, தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க தெரிவித்தார்.




இந்தநிலையில், உள்ளூராட்சி மன்றத் தேர்தல் எதிர்வரும் மே மாதம் 6 ஆம் திகதி நடைபெறவுள்ளது.



# நிதி தொடர்பான கல்வியறிவு இல்லாமையினால் நிகழ்நிலை மோசடிக்கு ஆளாகின்றனர் மக்கள்

## மத்திய வங்கி ஆளுநர் நந்தலால் வீரசிங்க தெரிவிப்பு

மக்களிடையே நிதி கல்வியறிவு போதுமானதாக இல்லாததன் காரணமாக, அவர்கள் நிகழ்நிலை மோசடிக்கு ஆளாகும் நிலைமை அதிகரித்துள்ளதாக மத்திய வங்கி ஆளுநர் நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

நுவரெலியா மாவட்டத்தில் டிஜிட்டல் கொடுப்பனவுகள் ஊக்குவிப்பு பிரசாரத்தில் உரையாற்றும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்கள் வழங்கும் புதிய தொழில்நுட்ப சேவைகள் குறித்து பொதுமக்களை விழிப்புணர்வுடன் செயற்படுமாறும் மத்திய வங்கி ஆளுநர் தெரிவித்துள்ளார்.

நிதி கொடுக்கல் வாங்கல் செயற்பாடுகளின் போது தாள்கள், நாணயத்தினை எடுத்துச் செல்வதை விட டிஜிட்டல் முறைமையினை பயன்படுத்துவது இலகுவானதாகும் எனவும்



மத்திய வங்கி ஆளுநர் நந்தலால் வீரசிங்க இதன்போது குறிப்பிட்டுள்ளார்.






# தென்னக்கோனைப் பதவி நீக்க நாடாளுமன்றத்தால் முடியாது!

## முன்னாள் அமைச்சர் கம்மன்பில தெரிவிப்பு

"நீதிமன்றத்தின் உத்தரவு நடைமுறையிலிருக்கும் நிலையிலும், நீதிமன்றத்தில் விசாரணைகள் இடம்பெற்றுக் கொண்டிருக்கும் நிலையிலும் தேசபந்து தென்னக்கோனை பொலிஸ்மா அதிபர் பதவியிலிருந்து நீக்குவது குறித்து நாடாளுமன்றத்தால் எந்தவொரு தீர்மானத்தையும் எடுக்க முடியாது."

– இவ்வாறு முன்னாள் அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் மேலும் கூறுகையில்,

"பொலிஸ்மா அதிபர் பதவியிலிருந்து தேசபந்து தென்னக்கோனை நீக்குவதற்கான யோசனை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது என்று செய்திகள் வெளியாகியுள்ளன. ஆனால், அது தவறான தகவலாகும். அவ்வாறு தேசபந்து தென்னக்கோனை தற்போது பொலிஸ்மா அதிபர் பதவியிலிருந்து நீக்க முடியாது.

தற்போது நாட்டில் நீதிமன்றத் தடையுத்தரவுக்கு உள்ளாகியுள்ள பொலிஸ்மா அதிபருடன், பதில் பொலிஸ்மா அதிபர் ஒருவரும் இருக்கின்றார்.

வழக்கு விசாரணைகள் நிறைவடையும் வரை தேசபந்து தென்னக்கோன் பொலிஸ்மா அதிபருக்குரிய பணிகளைச் செய்வதற்கு நீதிமன்றத்தால் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அவ்வாறெனில் தற்போதும் தேசபந்துவே பொலிஸ்மா அதிபர் ஆவார்.

நீதிமன்றத்தின் உத்தரவு நடைமுறையிலிருக்கும் நிலையிலும், நீதிமன்றத்தில் விசாரணைகள் இடம்பெற்றுக் கொண்டிருக்கும் நிலையிலும் அது குறித்து நாடாளுமன்றத்தால் எந்தவொரு தீர்மானத்தையும் எடுக்க முடியாது.

அவ்வாறானதொரு நடவடிக்கை எடுக்கப்பட்டால் அது நேரடியாக நீதித்துறையில் நாடாளுமன்றம் ஆதிக்கம் செலுத்துவதாகவே அமையும். எனவே, நீதிமன்றம் தீர்ப்பளிக்கும் வரை தேசபந்து தென்னக்கோன் குறித்த எந்தவொரு தீர்மானத்தையும் நாடாளுமன்றத்தில் விவாதிக்கவோ, நிறைவேற்றவோ முடியாது. இந்த விவகாரத்தில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால பொய் கூறி நாடாளுமன்றத்தை ஏமாற்றியிருக்கின்றார்.

தேசிய மக்கள் சக்தியினர் பொய் கூறுவதில் ஆச்சரியப்படுவதற்கொன்றுமில்லை. பெப்ரவரி 27ஆம் திகதி தேசபந்து தென்னக்கோனைக் கைது செய்வதற்கு நீதிமன்ற உத்தரவு பெற்றுக்கொள்ளப்பட்டது. ஆனால், மார்ச் 17ஆம் திகதி தான் அவரது வீடு பரிசோதிக்கப்பட்டது. அதற்குப் பதிலாக முன்னாள் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் மற்றும் பஸ்நாயக்க நிலமே ஆகியோரது இல்லங்களே சோதனைக்குட்படுத்தப்பட்டன. நீதிமன்ற உத்தரவு கிடைக்கப் பெற்று 20 நாட்களின் பின்னர் தேசபந்துவின் வீடு சோதனைக்குட்படுத்தப்பட்டதன் பின்னணியில் அரசு அரங்கேற்றும் நாடகமே காணப்படுகின்றது.

தேசபந்துவின் மனைவி சட்டத்தரணியாவார். பொலிஸார் தமது இல்லத்தைச் சோதனைக்குட்படுத்தப் போவதில்லை என்பதை அறிந்ததால்தான் அவர் மதுபான போத்தல்களை அப்புறப்படுத்துவதற்குக் கூட நடவடிக்கை எடுக்கவில்லை. தேசபந்துவின் நியமனம் சட்ட ரீதியானது என நீதிமன்றம் தீர்ப்பளித்தால் 2031ஆம் ஆண்டு வரை அவர் அந்தப் பதவியில் நீடிப்பார். எனவேதான் அவரைக் கைது செய்வதில் பொலிஸார் பின்வாங்கினர்." – என்றார்.

---

## அநுர அரசுக்குத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"வடக்கு, கிழக்கில் தமிழரசுக் கட்சியினுடைய வேட்புமனுக்கள் நிராகரிக்கப்படவில்லை. மன்னார் மாவட்டத்தில் மாத்திரம் ஒரு சபையின் வேட்புமனு நிராகரிக்கப்பட்டுள்ளது. அதற்கு எதிராக நீதிமன்றத்தை நாடவுள்ளோம்.

தேசிய மக்கள் சக்தி மட்டுமல்ல தமிழரசுக் கட்சியும் யாழ்ப்பாணத்தில் தாக்கல் செய்துள்ள அனைத்து வேட்புமனுக்களும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. அதேபோல் நாம் அனைத்து சபைகளிலும் ஆட்சியமைப்போம். வடக்கு, கிழக்கில் தமிழரசுக் கட்சியை வீழ்த்தவே முடியாது.

எமது தலைவர் பிரபாகரனினுடைய பெயரை உச்சரிக்கும் அளவுக்கு தேசிய மக்கள் சக்தியினர் வந்துள்ளார்கள் என்பதற்கு வாழ்த்துகின்றோம். தேர்தலில் வெற்றி பெற வேண்டும் என்பதற்காக அவரது பெயரையும், அவர் பிறந்த ஊரான வல்வெட்டித்துறை மண்ணையும் கூறுகின்றமை வாழ்த்துக்குரிய விடயமாகும்.

தேசிய மக்கள் சக்தியினரின் செயற்பாடு வெறும் வாயளவிலானது மாத்திரமே தவிர, இந்த ஆறு மாத காலப்பகுதியில் அவர்கள் எதுவும் செய்யவில்லை. மிக முக்கியமாக எமது வடக்கு மாகாணத்துக்குத் தேசிய மக்கள் சக்தியினர் எதுவும் செய்யவில்லை. செய்யப் போவதும் இல்லை. இதை மக்கள் உணர்ந்துவிட்டார்கள்.

பட்டலந்த ஆணைக்குழு பற்றி நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்த தேசிய மக்கள் சக்தி அரசு, பரணகம ஆணைக்குழு, எல்.எல்.ஆர்.சி. அறிக்கை, உடலகம ஆணைக்குழு ஆகியவற்றில் தமிழ் மக்கள் கொல்லப்பட்டமை தொடர்பில் ஒரு வார்த்தை கூட பேசுவதற்குத் தகுதியற்றவர்கள்.

இந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் இந்த அரசுக்குத் தமிழ் மக்கள் சிறந்த பாடத்தைப் புகட்டுவார்கள்." – என்றார்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சட்ட விற்பன்னர் குறை கூறியிருக்கிறார்.

இதில் கதிர்காமத்து அழகி பிரேமாவதி மனம்பேரி மற்றும் கிருஷாந்தி குமாரசாமி ஆகியோர் விடயத்தில் பெரும் போராட்டங்களுக்கு மத்தியில் இலங்கை சட்டத்தின் பிரகாரம் நீதி நிலைநாட்டப்பட்டிருக்கின்றது. இசைப்பிரியா விடயத்தில்தான் நீதி நிலைநாட்டப்படவில்லை, பொறுப்புக் கூறல் நடைமுறைப்படுத்தப்படவில்லை என்று சுட்டி காட்டினார் அந்தச் சட்ட விற்பன்னர்.

நீதி நிலைநாட்டப்பட்ட விடயங்களை, இன்னும் நிலை நாட்டப்படாத விவகாரங்களாக நாடாளுமன்றத்தில் தமிழரசுக் கட்சி குறை கூறுவது, அது பற்றிய எங்களுடைய தெளிவின்மையை சுட்டிக் காட்டுவதாக அந்த சட்ட விற்பன்னர் கூறினார். அதில் நியாயம் உண்டு.

இசைப்பிரியா போன்று பல பல நூறு தமிழ் இளம் யுவதிகளுக்கு எதிராக அரசுப் படைகளினால் இழைக்கப்பட்ட பாலியல் கொடூரங்கள், சித்திரவதைகள், படுகொலைகள் குறித்து எந்த விசாரணையோ அசுமாத்தமோ இல்லை என்ற தமிழர் தலைமையின் சீற்றத்தின் பிரதிபலிப்பே சிறிதரனின் உரை. அதனால் ஒரு 'வ்ளோவில்' (Flow வில்) அப்படி நீதி நிலைநாட்டப்பட்ட விடயங்களையும் சிறிதரன் சேர்த்து பேசியிருக்கக் கூடும்.

ஆயினும், நீதி நிலைநாட்டப்பட்ட இந்த இரண்டு விவகாரங்களும் – தெற்கில் அழகி பிரேமாவதி மனம்பேரி, வடக்கில் கிருஷாந்தி குமாரசாமி ஆகியோரின் விடயங்கள் – சர்வதேச மட்டம் வரை பரபரப்பாக பேசப்பட்டன. குரல் எழுப்பப்பட்டன. அதன் காரணமாக வேறு வழி இன்றி நீதியை நிலைநாட்ட கொழும்பு அரசு இணங்க வேண்டியதாயிற்று.

இரண்டுமே இலங்கை இராணுவத்தினால் மேற்கொள்ளப்பட்ட பாலியல் படுகொலைக் கொடூரங்கள்.

பிரேமாவதி மனம்பேரி 1971 இல் ஜே.வி.பியின் கிளர்ச்சியின் போது, கிளர்ச்சியாளர்களுக்கு உதவி செய்தார் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு, ஒருநாள் இரவு முழுவதும் இராணுவத்தினரால்பாலியல்வன்முறைக்கும் சித்திரவதைக்கும் உட்படுத்தப்பட்டார். அவரை நிர்வாணமாக்கிய இராணுவத்தினர், கதிர்காமம் புனித நகரின் வீதிகளில் நிர்வாணமாக அவரை இழுத்து வந்து பொதுமக்கள் முன்னிலையில் துன்புறுத்தி, அஞ்சலகம் ஒன்றின் முன்னாள் வைத்து அவரைச் சுட்டுத் தீ வைத்து விட்டு சென்றனர். பின்னர் மீண்டும் திரும்பி வந்து சுட்டுக் கொன்றனர். மனம்பேரி இறுதியில் தலையில் சூட்டு காயம் பட்டு இறந்தார்.

இந்தக் கொடூர குற்றத்துக்காக லெப்டினனட் ஏ.விஜயசூரிய, அமரதாச ரத்நாயக்க இருவரும் நீதிமன்றத்தினால் குற்றவாளிகளாகக் காணப்பட்டனர். இருவருக்கும் 16 ஆண்டுகள் கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. 1988 இல் ஜே.வி.பி. கிளர்ச்சி மீண்டும் உச்சம் பெற்றிருந்த சமயம் லெப்டினனட் ஏ.விஜயசூரிய மாத்தறையில் வைத்து ஜே.வி.பியினரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

கிருஷாந்தி குமாரசாமி யாழ்ப்பாணம் சுண்டிக்குளி மகளிர் கல்லூரி மாணவி. உயர்தர வகுப்பு கற்றுக் கொண்டிருந்த போது 1996 செப்டம்பர் 7ஆம் திகதி கைத்தடி – செம்மணிக் காவலரணில் வைத்து இராணுவத்தினரால் வழிமறிக்கப்பட்டார். இராணுவத்தினரால் கூட்டாகப் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டார். பின்னர் அவரும் அவரைத் தேடிச் சென்ற அவரது தம்பி பிரணவன், தாயார் ராசம்மா, குடும்ப நண்பரும் அயலவருமான சிதம்பரம் கிருபாமூர்த்தி ஆகியோர் கழுத்து கயிற்றினால் இறுக்கி நெறிக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டனர்.

வடக்கில் கிருஷாந்தி மற்றும் குடும்பத்தவருக்கு எதிரான இராணுவக் கொடூரம் குறித்த விடயம் பெரும் கிளர்ச்சியாக – மக்கள் போராட்டமாக – வெடித்தமையை அடுத்து விடயத்தை வெளிப்படையாக விசாரித்து, உண்மையை அம்பலப்படுத்த வேண்டிய கட்டாயம் அரசு தரப்புக்கு ஏற்பட்டது. அந்தப் பின்புலத்தில் விசாரணைகள், புலனாய்வுகள் முன்னெடுக்கப்பட்டு, கிருஷாந்தியும் குடும்பத்தவர்களும் புதைக்கப்பட்ட செம்மணி புதைகுழிகள் தோண்டப்பட்டன. புதைகுழிகள் தோண்டப்பட்ட சமயம் அருகில் இருந்து அது பற்றிய செய்திகளை சேகரித்து நான் பணியாற்றியபத்திரிகைக்கும்,பி.பி.சி.தமிழ்ஓசைக்கு என் குரலிலும் நானே நேரடியாக வழங்கினேன்.

கிருஷாந்திக்கு நேர்ந்ததைக் கண்டுபிடித்து அம்பலப்படுத்துவதிலும், அவருக்கு நீதி தேடுவதிலும் யாழ். குடா நாட்டிலும் சர்வதேசத்திலும் முன்னெடுக்கப்பட்ட போராட்டங்களில் ஊடகவியலாளனாக என்னுடைய பங்கு மிகக் காத்திரமாக இருந்ததை இப்போதும் நினைத்து பார்க்கிறேன். அந்தச் சமயத்தில் – யாழ்ப்பாணம் இருந்த கட்டத்தில் – அது மிகவும் துணிச்சலான, உயிர் ஆபத்தை வேண்டித் தருகின்ற ஒரு நடவடிக்கை.

என் நினைவு சரி என்றால் அந்த வழக்கில் சோமவன்ஸ ராஜபக்ஷ உட்பட ஆறு இராணுவத்தினருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது.

அதற்கு எதிரான மேன்முறையீட்டை நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கா தலைமையிலான ஐந்து நீதியரசர்கள் கொண்ட உயர்நீதிமன்ற ஆயம் தள்ளுபடி செய்து மரண தண்டனைகளை உறுதிப்படுத்தியது.

இந்தத் தண்டனை வழங்கப்பட்ட நீதிமன்ற விசாரணைகளுக்கு இடையே சோமவன்ஸ ராஜபக்ஷ வழங்கிய ஒப்புதல் வாக்குமூலங்களுக்கு அமைவாக செம்மணியில் புதைக்கப்பட்ட சுமார் ஒன்றரை டசின் தமிழர்களுடைய உடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டு தோண்டி எடுக்கப்பட்டன. அப்போதும் அவை பற்றிய செய்திகளை பத்திரிகைக்கும் பி.பி.ஸி. தமிழோசைக்கும் நானே வழங்கினேன்.

சரி. இனி பிறிதொரு விடயத்துக்கு வருவோம்.

கிருஷாந்தி படுகொலைக்கு பின்னர் சில ஆண்டுகள் கழித்து – 2000 ஆம் ஆண்டில் – மிருசுவிலிலும் குழந்தைகள் உட்பட எட்டு அப்பாவித் தமிழ் அகதிகள் கழுத்து நெரிக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டு மலசலக் கூடக் குழியில் போடப்பட்டனர்.

அது தொடர்பான வழக்கில் ஐந்து இராணுவத்தினர் மீது குற்றம் சுமத்தப்பட்ட போதிலும் அவர்களில் நால்வர் போதிய ஆதாரங்கள் இல்லாத காரணத்தினால் விடுவிக்கப்பட்டனர். இராணுவத்தின் ஸ்டாவ் சார்ஜண்ட் சுனில் ரத்நாயக்கா மட்டும் குற்றவாளியாகக் காணப்பட்டு மரண தண்டனை விதிக்கப்பட்டார். அவரது மேன் முறையிட்டையும் ஐந்து நீதியரசர்கள் கொண்ட உயர்நீதிமன்ற ஆயம் நிராகரித்து தண்டனையை உறுதிப்படுத்தியது.

அப்படி இருக்கையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தன்னுடைய தற்றுணிவில் சுனில் சுனில் ரத்நாயக்காவுக்கு பொது மன்னிப்பு அளித்து அவரை விடுவித்தார். அப்போதைய பாதுகாப்புச் செயலாளர் ஓய்வு பெற்ற ஜெனரல் கமல் குணரத்தின நேரடியாக சிறைச்சாலைக்கு சென்று அவரது விடுதலையை நேரில் அவதானித்து உறுதிப்படுத்தினார்.

அந்த விடுதலைக்கு எதிரான வழக்கு விசாரணை நடைபெற்று உயர் நீதிமன்றத்தில் தீர்ப்புக்காக காத்திருக்கின்றோம்.

கிருஷாந்தி குமாரசாமி விடயத்திலும், மிருசுவில் படுகொலையிலும் தமிழர்களே பாதிக்கப்பட்டனர். தமிழர்களுக்கு எதிரான இராணுவ அட்டூழிய விடயங்களில் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்ட வழக்குகள் இவை இரண்டும்தான். ஆனால் ஒரு வழக்கில் சம்பந்தப்பட்ட இராணுவ சார்ஜண்டுக்கு மன்னிப்பு வழங்கி விடுவிப்பதில் தீவிரம் காட்டிய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, கிருஷாந்தி குமாரசுவாமி வழக்கின் ஆறு தண்டனைக் கைதிகளான முன்னைய படையினர் தொடர்பில் கவனம் எடுக்கவில்லை. சிரத்தை காட்ட வில்லை. இது ஏன்? அதற்குக் காரணம் உண்டு.

கிருஷாந்தி வழக்கில் சம்பந்தப்பட்ட எதிரிகள் தாங்கள் மாட்டிக்கொண்டமைக்காக, இராணுவத்தினர் தமிழர்களைப் படுகொலை செய்து புதைத்த பிற புதைகுழிகளைக் காட்டிக் கொடுத்து படையினருக்கு எதிராக வஞ்சம் தீர்த்துக் கொண்டனர் என்பது படைத்தரப்பின் கோபம்.

ஆனால் மிருசுவில் வழக்கில் எட்டுத் தமிழர்களை படுகொலை செய்த விடயத்தில் பல இராணுவத்தினர் சம்பந்தப்பட்ட போதிலும் குற்றவாளியாக காணப்பட்ட ஸ்டாவ் சார்ஜண்ட் சுனில் ரத்நாயக்கா மற்ற எவரையும் காட்டிக் கொடுக்கவில்லை. நீதிமன்றத்தில் மௌனம் சாதித்து குற்றத்தை தன்மேல் ஏற்றுக் கொண்டு, மற்றவர்களைக் காப்பாற்றினார் என்ற பேச்சு, அதே படையணியில் முன்னர் பணியாற்றிய கோட்டாபய ராஜபக்ஷவுக்கும், அவரது பாதுகாப்பு செயலாளராக இருந்த ஜெனரல் கமல் குணரத்தினவுக்கும் மனதில் உறுத்திக் கொண்டிருந்ததாகக் கூறப்படுகின்றது. அதனால்தான் சட்ட நடைமுறைகள், விதிமுறைகளை எல்லாம் மீறித் தம்பாட்டில் திடீரென ஒரு நாள் அவசர அவசரமாக சுனில் ரத்நாயக்காவுக்கு பொது மன்னிப்பு மூலமாக விடுதலைக்கு அவர்கள் நடவடிக்கை எடுத்தனர் என்று கூறப்படுகின்றது.

எது, எப்படியாயினும் இந்தப் பொது மன்னிப்பு சரியா என்பது தொடர்பான தீர்ப்பு இன்னும் இரண்டு மாதங்களில் வெளிவரும் போது நிலைமை தெளிவாகும்.

அந்தத் தீர்ப்பு வழங்கப்பட முன்னரே, தற்போது பொது மன்னிப்பின் பெயரில் விடுதலையாகி வெளியில் இருக்கும் சுனில் ரத்நாயக்கா நாட்டை விட்டு வெளியேறாமல் இருப்பதை உறுதிப்படுத்தும் விதத்தில் அவருக்கு உயர் நீதிமன்றம் பயணத் தடை விதித்திருக்கின்றது. அந்தப் பயண தடை, தீர்ப்புக்கு முற்கூட்டிய செய்தி ஒன்றை சொல்வதாகப் பலரும் கருதுகின்றனர்.

# நாடளாவிய ரீதியில் மீண்டும் அரிசிக்கு தட்டுப்பாடு ஏற்படும்



நாடளாவிய ரீதியில் மீண்டும் அரிசிக்கு தட்டுப்பாடு ஏற்படக்கூடும் என விவசாய சங்கங்கள் எச்சரிக்கை விடுத்துள்ளன.

கடந்த காலங்களில் ஏற்பட்ட அரிசி பற்றாக்குறையை நிவர்த்திப்பதற்காக அரிசியை இறக்குமதி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இந்தநிலையில், இந்த வருடம் பெரும்போகத்தின் போது 2.9 மில்லியன் மெற்றிக் டன் நெல்லை அறுவடை செய்வதற்கு அரசாங்கத்தினால் எதிர்பார்க்கப்பட்டது.

எனினும், நாட்டில் நிலவிய சீரற்ற காலநிலையால் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக நெல் அறுவடையானது 2.4 மில்லியன் மெற்றிக் தொன்னாக குறைவடைந்தது.

## இரட்டை வேடம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

"இன்று இராணுவத்தினரின் வாகனங்கள் ஆட்களை ஏற்றியிறக்கும் பணிகளில் அதிகளவில் ஈடுபட்டுள்ளன. இதனை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

இந்தக் காணிகள் விடுவிக்கப்பட வேண்டும் என்று கோரிக்கை முன்வைக்கப்பட்டு தொடர்ச்சியாகப் போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

இந்தநிலையில் இரண்டு நாட்களுக்கு முன்னர்கூட கொழும்பில் காணி உரிமையாளர்களை அமைச்சர் சந்தித்து, "இது உங்களுடைய காணிகள் என சொன்னால் விடுவிப்போம்" என்று ஒருபுறத்தில் கூறிக்கொண்டு, மறுபுறத்தில் அதே அரச இயந்திரம் சட்டவிரோத விகாரை வளாகத்துக்குள் அமைக்கப்பட்ட கட்டடத் திறப்பு விழாவுக்கு அரச வளங்களைப் பயன்படுத்திக் கொண்டிருப்பது என்பது அநுர அரசின் இரட்டை முகத்தைக் காட்டுகின்றது.

அநுர ஒருபுறத்திலே தான் இனவாதம், மதவாதத்துக்கு இடமளிக்கமாட்டேன் எனச் சொல்லிக்கொண்டு, தமிழர் தேசத்தில் மேலும் மேலும் பௌத்த விரிவாக்கல் நடவடிக்கைகளை முன்னெடுக்கிறார். அவரின் தலைமையில்தான் முன்னெடுக்கப்படுகின்றது.

எங்கள் மக்கள் இதனைப் புரிந்து கொள்ள வேண்டும். கடந்த ஜனாதிபதித் தேர்தலில், நாடாளுமன்றத் தேர்தலில் அற்ப சலுகைகளுக்காக இந்த இனவாத அரசுக்கு ஆதரவு வழங்கிய தமிழ் புத்திஜீவிகளும் இதற்கு பொறுப்புக்கூற வேண்டியவர்கள். இதன்விளைவுகள் எதிர்காலத்தில் எவ்வாறு வந்து முடியும் என்பதைக் காலம்தான் சொல்ல வேண்டும்.

இந்தத் திறப்பு விழா நடவடிக்கை நிறுத்தப்பட வேண்டும் என்பது போராட்டக்காரர்களின் – காணி உரிமையாளர்களின் கோரிக்கை. எந்தவகையிலும் இதனை நியாயப்படுத்த முடியாத – ஏற்றுக்கொள்ள முடியாத – ஆக்கிரமிப்பு நடவடிக்கை." – என்றார்.

## வெடிமருந்து, துப்பாக்கி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

என்று பொலிஸார் நேற்று தெரிவித்துள்ளனர்.

கொழும்பு, பொரளை பொலிஸ் பிரிவின் ஓவல் மைதானத்துக்கு அருகில் வெடிமருந்துகளுடன் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொரளை பொலிஸ் நிலைய அதிகாரிகள் குழுவுக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் பத்தரமுல்லை பகுதியைச் சேர்ந்த 24 வயதுடையவர் எனத் தெரியவந்துள்ளது.

சந்தேகநபரிடமிருந்து ரி – 56 ரக துப்பாக்கிக்குப் பயன்படுத்தப்படும் வெடிமருந்தும் மற்றும் எல்.எம்.ஜி. வெடிமருந்தும் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதேவேளை, கோமரன்கடவல, கஜுவத்த பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் ரி – 56 ரக துப்பாக்கியை வைத்திருந்த இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் குச்சவெளி பகுதியைச் சேர்ந்த 23 வயதுடையவர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## குடும்பஸ்தர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கிளிநொச்சி, தர்மபுரம், உழவனூரைச் சேர்ந்த 3 பிள்ளைகளின் தந்தையான நடராசா இன்பராசா (வயது 56) என்பவரே உயிரிழந்துள்ளார்.

மேற்படி குடும்பஸ்தர் கடந்த 19ஆம் திகதி இரவு காய்ச்சல் ஏற்பட்டதைத் தொடர்ந்து மறுநாள் தர்மபுரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் கிளிநொச்சி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்த நிலையில், மேலதிக சிகிச்சைக்காக 21 ஆம் திகதி யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்தார்.

இந்நிலையில், நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 6.30 மணியளவில் அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இந்த மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் விசாரணைகளை மேற்கொண்டு பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டார். சாட்சிகளைத் தர்மபுரம் பொலிஸார் நெறிப்படுத்தினர்.

## மன்னார், பூநகரி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இதில், 336 உள்ளூராட்சி சபைகளுக்கான வேட்புமனுக்கள் தாக்கல் கடந்த வியாழக்கிழமை நண்பகல் 12 மணியுடன் நிறைவடைந்தது. இந்தநிலையில், மன்னார், பூநகரி, தெஹியத்தகண்டி பிரதேச சபைகளுக்கான வேட்புமனுத் தாக்கல் இன்று ஆரம்பமாகின்றது.

இதேவேளை, அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள் நாளை செவ்வாய்க்கிழமை வரை கட்டுப்பணத்தைச் செலுத்த முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## பயனற்ற வாய்ப் பேச்சு

அநுரகுமார திஸநாயக்காவின் ஆளுமை மிக்க உரைகளே தேசிய மக்கள் சக்தியை ஆட்சி பீடத்திற்கு ஏற்றியது என்பது எல்லோரும் ஒப்புக் கொள்ளும் உண்மை.

முன்னைய அரசுகளின் ஊழல், மோசடிகள் குறித்து விலாவாரியாகப் பேசிப் பேசியே தமது அரசியல் அணியை ஆட்சி பீடம் ஏற்றினார் அநுரகுமார திஸநாயக்கா.

நாங்கள் ஆட்சிக்கு வந்தால் ஊழல், மோசடிகளை அடியோடு இல்லாது ஒழிப்பது மட்டுமின்றி, முன்னைய காலத்தில் ஊழல், மோசடிகளில் ஈடுபட்ட அரசியல்வாதிகளைக் கைது செய்து, இழுத்து வந்து, சட்டத்தின் முன்னால் நிறுத்தி, பொறுப்புக் கூற வைத்து, அவர்கள் சூறையாடிய அரச சொத்துக்கள், நிதிகளை மீளக் கொண்டு வந்து சேர்ப்போம் எனத் திரும்பத் திரும்ப உறுதிப்படக் கூறினார் அநுரகுமார திஸநாயக்கா.

அவரது அந்த வாயச் சவடால் பேச்சை நம்பித்தான் மக்கள் அவருக்கும், பின்னர் பொதுத் தேர்தலில் அவரது தரப்புக்கும் பெருவாரியாக வாக்களித்து அதிகாரத்துக்குக் கொண்டு வந்தார்கள்.

தாம் ஜனாதிபதியாகப் பதவியேற்றதும் உரையாற்றிய அநுர குமார திஸநாயக்கா நாட்டின் லஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழு பெரும் அரசியல்வாதிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவே இல்லை என்று வைதார்.

“லஞ்ச, ஊழல் ஆனைக்குழு 2021 ஆம் ஆண்டில் ஆக 36 பேரையே கைது செய்தது. அதிபர்கள், ஒரு சப் இன்ஸ்பெக்டர், மூன்று சார்ஜண்ட்கள், 5 பொலிஸ் கான்ஸ்டபிள்கள், ஓர் அபிவிருத்தி உத்தியோகத்தர், நான்கு கிராம சேவையாளர்கள், ஒரு சாதாரண பொதுமகன், பிரதேச சபை ஒன்றின் பிரதம எழுதுவினைஞர், ஒரு தொழில்நுட்ப அதிகாரி, ஒரு கால்நடை அலுவலர், ஒரு காணி அலுவலர், பஸ் டிப்போவின் ஒரு முகாமையாளர் போன்றோரே கைது செய்யப்பட்டார்கள். பெரும் அளவில் ஊழல், மோசடிகள், குளறுபடிகளில் ஈடுபட்ட அரசியல்வாதிகளும் அவர்களின் முகவர்களும் தீண்டப்படவே இல்லை.” - என்று அப்போது குறை கூறியிருந்தார் அநுர குமார திஸநாயக்கா.

மிக் ரகக் குண்டு வீச்சு விமானக் கொள்வனவில் பெரும் ஊழல் இடம் பெற்றது என்பதிலிருந்து பல ஊழல் விடயங்கள் குறித்து அவர் விவரிக்கத் தவறவில்லை.

ஆனால் ஆட்சிக்கு வந்து ஆறு மாதங்கள் கழிந்தும், இத்தகைய ஊழல், மோசடி, குளறுபடிகள் தொடர்பாக புதிய நடவடிக்கை எதையும் அவரது அரசு எடுக்கவே இல்லை. இந்த கால கட்டத்தில் மஹிந்த ராஜபக்ஷவின் இரண்டு பிள்ளைகளான நாமல் ராஜபக்ஷ, யோசித ராஜபக்ஷ ஆகியோர் மீது மட்டும் இரண்டு வழக்குகள் தொடுக்கப்பட்டுள்ளன. அவை கூட ஏற்கனவே இருந்த விசாரணைகளின் தொடர்ச்சியாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்தான்.

எதிரணியில் இருந்த போது வாய் முழக்கம் செய்து, காரியங்களை வெட்டிப் பிடுங்க போகிறார் எனப் பிரகடனப்படுத்திய அநுரகுமார திஸநாயக்காவினால் அதிகாரத்துக்கு வந்த பின்னர் அந்த வாய்ச் சவடால் விடயங்களை செயலில் செய்து காட்ட முடியவில்லை என்பதுதான் கள யதார்த்தமாகும்.

இதே போலத்தான் ஈஸ்டர் தொடர் குண்டுத் தாக்குதல் தொடர்பில் குற்றவாளிகளைச் சட்டத்தின் முன் விரைந்து நிறுத்துவோம் என்ற அநுரகுமார திஸநாயக்காவின் வாக்குறுதியும் கூடச் செயல்படுத்த முடியாத வக்கற்ற நிலைமையே நீடிக்கின்றது.

அடுத்த ஏப்ரல் 21ஆம் திகதி இந்தத் தாக்குதலின் ஆறாம் ஆண்டு நினைவு நாள். அதற்கிடையில் காத்திரமான திசையில் விசாரணை முன்நகரவில்லையானால் கட்டுநாயக்கா அதிவேகப் பாதையை ஒட்டி சுமார் 38 கிலோமீட்டர் ஆட்சேபனை நடைபவனியை முன்னெடுக்க கிறிஸ்தவ திருச்சபை தீர்மானித்திருக்கிறது.

செயலில் செய்து காட்ட முடியாத வெறும் வாய்ச் சவடால் பேச்சுக்கள் அரசியலில் எப்போதுமே நெருக்கடியையே தேடித் தரும் என்பது உண்மைதான்.

# நெஞ்சினில் நிறைந்த தொழிலதிபர் லீலா குழும ஸ்தாபகர் சின்னத்துரை

## அவரது 45 ஆவது நிறைவு தினம் அனுஷ்டிப்பு

- ஊறெழு அ. கனகசூரியர் -



ஒருவர் பிறந்து சிறப்போடு வாழ்ந்து, மறைவது என்பதுதான் வாழ்க்கை. இந்த வகையில் “தோன்றின் புகழொடு தோன்றுக“ என வள்ளுவர் பெருமான் சொல்லி வைத்திருப்பதில் பொதிந்துள்ள அர்த்தம் சிறப்புமிக்கது. இதற்கு அமைய தோன்றி, வாழ்ந்து, மறைந்தாலும் இன்றும் அனைவரினாலும் போற்றப்பட்டு நினைவுகூரப்படும் ஒருவராக விளங்குபவர்தான் கொழும்பு மாநகரில் பிரபல தொழிலதிபராகத் திகழ்ந்த அமரர் ச.த.சின்னத்துரை.

இவர் யாழ். மாவட்டத்திலுள்ள காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். 1903 ஜுலை 22ஆம் திகதியன்று தம்பையா – லட்சுமி தம்பதியினருக்கு புதல்வனாகப் பிறந்தார். இளம் வயதிலேயே இவர் ஆன்மீகத்தில் நாட்டம் கொண்டவராகவும், சமய சமூக சேவையில் ஆர்வமுள்ளவராகவும் விளங்கினார். இவரது சொந்த ஊரில் இயங்கிவந்த பொதுநல நிறுவனங்களில் இணைந்து சேவையாற்றியுள்ளார். இவர் மகாத்மா காந்தி மீது பெருமதிப்பு கொண்டவராக இருந்தமையுடன், காந்தியைப்போல எப்போதுமே கதர் ஆடையை அணிந்து கொள்வதால் இவரை “காந்தி சின்னத்துரை“ எனவும் செல்லமாக அழைப்பதுண்டு.

அந்நாளில் காங்கேசன்துறையில் செயற்பட்டுவந்த “பரஸ்பர நன்மை விருத்திச் சங்கம்” என்ற அமைப்பில் உறுப்பினராக இணைந்த இவர், பின்னாளில் அதன் தலைவராகவும் பதவி வகித்துள்ளார். 1950 ஆம் ஆண்டில் காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை ஆரம்பமாவதற்கு காரணமாக இருந்தவர்களுள் இவரும் ஒருவராவார். 1946ஆம் ஆண்டு இவரது தலைமையிலான பரஸ்பர நன்மை விருத்திச் சங்கத்தின் அனுசரணையுடன்தான் சீமெந்து தொழிற்சாலைக்கான அடிக்கல் நாட்டும் வைபவம் இடம்பெற்றது என்பதையும் சிறப்பாகக் குறிப்பிடலாம்.

இவர், தனது தந்தையாரின் மறைவைத் தொடர்ந்து, கொழும்பு சென்று அங்கு வர்த்தக ரீதியிலான செயற்பாடுகளை ஆரம்பித்தார். தனது கடுமையான உழைப்பினால், படிப்படியாக உயர்வடைந்தார். “லீலா குழுமம்“ என்ற பெயரிலான வர்த்தக அமைப்பை தோற்றுவித்தார். இதன் ஊடாக ஆரம்பிக்கப்பட்ட பல்வேறு நிறுவனங்களில் கொழும்புவாழ் தமிழ் – சிங்கள இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகளை வழங்கினார்.

அமரர் சின்னத்துரை வர்த்தகத் துறையில் முழுநேரத்தை செலவிட்டு வந்தாலும், ஒரு தீவிர சமயத் தொண்டராகவும் விளங்கினார்.

மருதானை கப்பித்தாவத்தை ஸ்ரீபாலசெல்வ விநாயகர் மீது பெரும் பக்தி கொண்டவராக வழிபட்டு வந்தமையுடன், பெரியார் ஆ. சின்னத்தம்பி தலைமையில் இயங்கிவந்த ஆலய திருப்பணி சபையிலும் பங்கு கொண்டு செயலாற்றியிருக்கிறார். அதனைத் தொடர்ந்து, கொழும்பில் இயங்கி வந்த கதிர்காம யாத்திரிகர் தொண்டர் சபையிலும் இணைந்து அதனூடாகவும் அரும்பெரும் பணிகளை ஆற்றி வந்துள்ளார். கதிர்காம உற்சவ காலத்தின்போது, மாத்தறை நகரில் இயங்கிவந்த யாத்திரிகர் மடத்தில் தொண்டர் சபையின் உறுப்பினர்களுடன் சேர்ந்து அன்னதானப் பணிகளை சிறப்புடன் நடத்தி வந்துள்ளார். கதிர்காம யாத்திரிகர் தொண்டர் சபையின் ஏற்பாட்டில் திருக்கேதீஸ்வரத்தில் பத்து அறைகளுடன் அமைக்கப்பட்டிருந்த யாத்திரிகர் மடத்திலும், உற்சவ காலத்தின்போது மேற்கொள்ளப்படும் அன்னதானப் பணிகளை நடத்துவதற்கும் இவர் உதவி வந்துள்ளார்.

இவரது லீலா குழுமத்தின் மற்றுமொரு நிறுவனமான லீலா அச்சகம் ஊடாக பல தமிழ், ஆங்கில, சிங்கள பிரசுரங்களும் நூல்களும் அச்சிட்டு வெளியிடப்பட்டு வந்தன. மும்மொழிகளிலும் அச்சிடும் பணியை மேற்கொண்டு வந்ததால் கொழும்புவாழ் தமிழ், சிங்கள மக்களுடனும், ஆங்கிலத்தை தாய்மொழியாகக் கொண்டிருந்தவர்களுடனும் இவர் நெருக்கமான உறவை வைத்திருந்தார் என்பதும் சிறப்புக்குரியது.

அமரர் சின்னத்துரை “சிந்தனைச் சிற்பச் செல்வர்“ என்று சிறப்பித்து அழைக்கப்பட்டவர். இவரது மனதில் உருவாகும் நல்ல சிந்தனைகளையும், எண்ணங்களையும் பலருக்கு உதவும் வகையில் செயற்படுத்தி வருவது இவரது வழக்கமாகும். அந்தவகையில் உருவாகியதுதான் லீலா பஞ்சாங்க சித்திரக் கலண்டர். வருடந்தோறும் பஞ்சாங்கக் குறிப்புகளுடன் சாதாரணமான வகையில் நாட்காட்டிகள் நாட்டில் வெளிவந்து கொண்டிருந்த அன்றைய காலப் பகுதியில், 1957ஆம் ஆண்டிலிருந்து தனது சிந்தனையில் உதித்த எண்ணத்தை செயற்படுத்தி நாட்காட்டி வெளியீட்டில் ஒரு புரட்சிகர மாற்றத்தை ஏற்படுத்தினார். அந்தந்த சிறப்புத் தினங்களுக்குப் பொருத்தமான படங்களுடன் அமைந்த நாட்காட்டியை முதன்முதலாக தனது லீலா அச்சகம் ஊடாக அறிமுகம் செய்தபோது, அந்நாளில் அது பலராலும் வரவேற்கப்பட்டது. இந்த சித்திரக் கலண்டர் தமிழில் மட்டுமல்ல சிங்களத்திலும் வெளி வந்தது.

இவர் 1931ஆம் ஆண்டு இல்லற வாழ்வில் அடியெடுத்து வைத்தார். சௌபாக்கியம் என்பவரை துணைவியாராக இணைத்துக் கொண்டார். இவர்களது குடும்ப வாழ்க்கையில் ஒன்பது ஆண்பிள்ளைகளைப் பெற்றெடுத்தனர். இவர்களது புதல்வர்கள் தந்தையாரைப் போலவே அவரது வழியைப் பின்பற்றி, சமய சமூக நலப் பணிகளிலும் தீவிர பங்களிப்புச் செய்து வருகின்றனர். இவர்கள் கல்வியிலும் மேலோங்கி சட்டம், மருத்துவம், பொறியியல் போன்ற துறைகளில் சிறந்து விளங்குவதுடன், வர்த்தகத் துறையிலும் பங்குகொண்டு பிரபல தொழில் அதிபர்களாக செயற்பட்டு வருவதும் சிறப்புக்குரியது.

இவர் காங்கேசன்துறையை சொந்த இடமாகக் கொண்டிருந்தமையால், அப்போதிருந்த தந்தை

தொடர்ச்சி▼

# நெஞ்சினில் நிறைந்த தொழிலதிபர் லீலா குழும ஸ்தாபகர் சின்னத்துரை

தொடர்ச்சி▲

செல்வா முதலான தமிழ் அரசியல் தலைவர்களுடன் நீண்டகாலமாகவே நட்புறவு வைத்திருந்தார். அதேவேளையில், கொழும்பிலிருந்த அரசியல் பிரமுகர்களுடனும், தொழிற்சங்கவாதிகளுடனும் நெருங்கிப் பழகும் சந்தர்ப்பமும் இவருக்கு கிடைத்தது. தொழிற்சங்க வளர்ச்சிக்கும் இவர் பெருமளவில் உதவி வந்துள்ளார்.

இவர், தமிழ் – சிங்கள மக்களின் நன்மதிப்பையும், அபிமானத்தையும் பெற்றுத் திகழ்ந்துள்ளார். இந்து ஆலயங்களின் வளர்ச்சிக்கு மட்டுமல்ல, பௌத்த கோவில்களின் விருத்திக்கும் பலவகையிலும் உதவி வந்திருப்பதும் சிறப்புக்குரியது. தமிழ் – சிங்கள மக்கள் ஒற்றுமையாக வாழவேண்டும் என்பதில் பெரு விருப்பம் கொண்டிருந்ததுடன் அதற்காக பெரிதும் செயற்பட்டவர்.

அமரர் சின்னத்துரை தனக்கிருந்த அரசியல் செல்வாக்கை பயன்படுத்தி பொதுநல முன்னேற்றத்திற்கும், கிராம அபிவிருத்திக்கும் உதவி வந்தவர். கீரிமலைக்கு வரும் யாத்திரிகர்கள் அங்குள்ள கேணியில் நீராடி, உடுப்புகளை மாற்றுவதற்கான தனி மண்டபம், மற்றும் தெல்லிப்பழை செல்வாபுரத்தில் பல அபிவிருத்திப் பணிகள், தெல்லிப்பழை மக்கள் குடியிருப்பு பகுதிகளில் வீதி திருத்த வேலைகளுடன், வீதியில் மின் விளக்குகளை பொருத்துவதற்கும் தேவையான ஏற்பாடுகளை, அந்நாளில் உள்ளூராட்சி அமைச்சராகவிருந்த ஆர். பிரேமதாசா ஊடாக செய்வித்த பெருமைக்குரியவர். இதற்கும் மேலாக தனது சொந்தக் கிராமத்தில் சமய மற்றும் ஆலய அறப்பணிகளையும் மேற்கொண்டு வந்தவர் என்பதையும் சிறப்பாகச் சொல்லலாம்.

இவர் 1980 மார்ச் மாதம் 22ஆம் திகதியன்று தனது 77ஆவது வயதில் காலமானார். இவர் மறைந்து 45 வருடங்கள் நிறைவடைந்தாலும், இவரது குடும்பத்தினர், உறவினர்கள், நண்பர்களது இதயங்களில் இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்.



# கொழும்பு புதுச்செட்டித் தெரு சாயி நிலைய வருடாந்த இஃப்தார் ஒன்று கூடல் நிகழ்ச்சி

கொழும்பு புதுச்செட்டித் தெரு சாயி பாபா மத்திய நிலையத்தின் வருடாந்த இஃப்தார் ஒன்று கூடல் நிகழ்வு கடந்த சனிக்கிழமை நிலையத்தின் பிரதம அறங்காவலர் எஸ்.என்.உதயநாயகன் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது, மௌலவி அபூ தாலிப் இர்ஷாத் ஷரபி இஸ்லாமிய மத அனுஷ்டானங்களை மேற்கொண்டிருந்தார். நிகழ்வில் சமூக சேவையாளர் கே. எம். ஜே.பஷீர், சாயி நிலைய பொதுச்செயலாளர் சிவா இராஜஜோதி, அறங்காவலர் கோபால் ஜீவரட்ணம் ஆகியோரும் பங்கேற்றனர்.

(படப்பிடிப்பு:- எம். எஸ்.சலீம்)





# கட்டாக்காலி மாடுகள் அறுக்கப்பட்டு ஏழைகளுக்கு வழங்கப்படும் என்கிறார் சுயேச்சைக் குழுத் தலைவர்

## நாவிதன்வெளி பிரதேச சபை தேர்தலில் இப்படி ஓர் உறுதி மொழி



**(பாறுக் ஷிஹான்)**

வீதியில் மக்களின் போக்குவரத்தைச் சீர்குலைக்கும் கட்டாக்காலி மாடுகள் உடனடியாக பிடிக்கப்பட்டு ஏழைகளுக்கு அறுத்து பங்கிட வேண்டிய நிலைமை ஏற்படும் என நாவிதன்வெளி பிரதேச சபை தேர்தலில் கால்பந்து சின்ன சுயேச்சைக் குழுத் தலைமை வேட்பாளர் நளீர் அபூபக்கர் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டம் நாவிதன்வெளி பிரதேச சபைக்கான வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்த பின்னர் அம்பாறை மாவட்டம் மத்திய முகாம் பகுதியில் உள்ள அவரது அலுவலகத்தில் நேற்றுத் தாம்நடாத்திய விசேட ட ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அங்கு மேலும் கருத்து தெரிவிக்கையில் –

நாவிதன்வெளி பிரதேச சபை அதிக வரிச் சுமையை மக்களுக்கு விதித்துள்ளது. இது ஒரு பாரிய அநீதி. பிரதேச சபை அதிகாரத்தை மக்கள் எனக்கு வழங்கினால் நிச்சயம் இவற்றுக்கு நிவாரணம் பெற்றுக் கொடுக்கப்படும். கட்டாக்காலி மாடுகள், நாய்கள் வீதிகளில் அதிகளவாக காணப்படுகின்றன. எதிர்காலத்தில் நாவிதன்வெளி பிரதேச சபைக்கு செல்வோமாயின் கட்டாக்காலி மாட்டு உரிமையாளர்களை அழைத்து கலந்துரையாடுவோம். இது தவிர கட்டாக்காலி மாடுகளினால் ஏற்படுகின்ற பிரச்சினைகள் குறித்து அவர்களுக்கு அறிவிப்போம். அவ்வாறு எமது சபையின் ஊடாக விடுக்கப்படும் அறிவுறுத்தலை மீறும் கட்டாக்காலி மாடுகள் உடனடியாக பிடிக்கப்பட்டு ஏழைகளுக்கு அறுத்துப் பங்கிடவேண்டிய நிலைமை ஏற்படும் என்பதை இவ்விடத்தில் தெரிவிக்க விரும்புகின்றேன்.

பிரதேச சபை விதித்துள்ள வரிகளைக் குறைப்பதே திட்டம். மக்களுக்கு நிச்சயம் நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுப்பேன்

நாவிதன்வெளி பகுதியில் 4 இறைச்சி கடைகள் உள்ளன. கேள்வி மனு பல இலட்சமாக உள்ளது. இதனை குறைத்தால் ஒரு கிலோ இறைச்சியை 1,800 ரூபாவுக்கு விற்பனை செய்ய முடியும். வீணாக மக்கள் மீது அதிக வரிச்சுமை பிரயோகிக்கப்பட்டுள்ளது. நாவிதன்வெளி பிரதேச சபை அதிகாரம் எமது குழுவுக்கு கிடைக்கும் பட்சத்தில் ஒரு மாதகால இடைவெளிக்குள் இவற்றுக்குத் தீர்வைப் பெற்றுக் கொடுப்பேன்.

திருமண மண்டபத்துக்கும் அதிக வரி இங்கு அறவிடப்படுகின்றது. அதாவது ஒரு திருமணத்துக்கு 50 ஆயிரம் ரூபா அறியப்படுகின்றது. இதுவும் நிவர்த்தி செய்யப்படும். – என்றும் நளீர் அபூபக்கர் மேலும் தெரிவித்துள்ளார்.

# யாழ். நகரப்பகுதியில் ஹெரோயினுடன் இரண்டு இளைஞர்கள் நேற்றுக் கைது!

யாழ்ப்பாணம் நகரப்பகுதியில் ஹெரோயின் போதைப்பொருளுடன் இரண்டு இளைஞர்கள் நேற்றுக் கைது செய்யப்பட்டனர்.

யாழ்ப்பாண மாவட்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவினர் மற்றும் யாழ்ப்பாணம் போதைப்பொருள் தடுப்பு பிரிவுப் பொலிஸார் இணைந்து இந்தக் கைது நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

கைதான 22 மற்றும் 23 வயதான இளைஞர்களிடம் இருந்து 805 மில்லிகிராம் ஹெரோயின் போதைப் பொருள் மீட்கப்பட்டது.





இரண்டு நபர்களையும் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# பொது மக்கள் எதிர்பார்த்த மறுமலர்ச்சி 'அவுட்'! பாதாள உலகத்திற்கே புதிய மறுமலர்ச்சி யுகம்!!

## திசைகாட்டி அரசினால் உதயமாகியுள்ளது என சஜித் குற்றச்சாட்டு









இன்று நாட்டை ஆளும் மக்கள் விடுதலை முன்னணியினர் வரலாறு முழுவதும் பாட்டாளி வர்க்கத்தையே பிரதிநிதித்துவப்படுத்தி வந்தனர். நாட்டை அழித்தது முதலாளித்துவ வர்க்கமே என்று இவர்கள் தொடர்ச்சியாகக் குறை கூறி வந்தனர். ஆனால் முதலாளித்துவ வர்க்கம் என்று சொல்லப்பட்ட அரசாங்கங்கள் மக்களுக்கு நல்லதையே செய்துள்ளன. அவ்வாறு செய்த நல்லனவற்றைக் கூட இவர்கள் குறை கூறி திரிகின்றனர். தெளிவான அதிகாரம் கிடைத்தும் இன்று இவர்களால் எதையுமே செய்ய முடியாது புலம்பிக் கொண்டிருக்கின்றனர் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை இலக்காகக் கொண்டு ஐக்கிய மக்கள் சக்தியின் கம்பஹா மாவட்ட வேட்பாளர்களுடன் நேற்று இடம்பெற்ற சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறியவை வருமாறு:-

முதலாளித்துவ வர்க்க அரசு நியாயமான விலையில் அரிசியைப் பெற்றுக் கொடுக்கும் போது, உழைக்கும் வகுப்பினரைப் பிரதிநிதித்துவப்படுத்தும் திசைகாட்டி அரசு 100 ரூபாய்க்கு மேலான விலையில் இன்று அரிசியை விற்பனை செய்து வருகிறது. நாட்டை அழித்தவை எனச் சொல்லப்படும் அரசாங்கங்கள் நியாயமான விலையில் தேங்காயை விற்கும் போது, உழைக்கும் வகுப்பினரைப் பிரதிநிதித்துவப்படுத்துவதாகச் சொல்லப்படும் திசைகாட்டி இன்று 100 ரூபாய்க்கும் அதிகமான விலையில் தேங்காயை விற்பனை செய்து வருகிறது. முதலாளித்துவ வர்க்க அரசாங்கங்கள் அவ்வப்போது உரிய நேரத்துக்கு உர மானியங்களை வழங்கி வந்தன. ஆனால் அறுவடை முடிந்த பின்னரே இந்த திசைகாட்டி அரசாங்கம் உர மானியத்தை வழங்கி வருகிறது. இந்த அரசாங்கத்தால் உரிய நேரத்துக்கு உரத்தைக் கூட வழங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

பல்லாயிரக்கணக்கான வேலையில்லாப் பட்டதாரிகள் இந்த அரசாங்கத்தை ஆட்சிக்குக் கொண்டு வருவதற்கு ஆதரவளித்தனர். ஆனால் இன்று வேலையில்லாப் பட்டதாரிகள் கூட கவனிப்பார் அற்ற நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளனர். அமைதியான முறையில் போராட்டத்தில் ஈடுபட்ட பட்டதாரிகள் மீது கண்ணீர் புகைப் பிரயோகம், தடியடி மற்றும் அரச பயங்கரவாத தாக்குதல்கள் முன்னெடுக்கப்பட்டன. பட்டதாரிகள் போராட்ட இடத்திலிருந்து வைத்திய சாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். பாட்டாளி வர்க்கத்திற்காக குரல் எழுப்பி ஆட்சிக்கு வந்த திசைகாட்டி, முதலாளித்துவத்தை பிரதியெடுத்து, சாதாரண மக்களை மறந்து, பாட்டாளி வர்க்கத்தை மறந்து செயல்பட்டு வருகிறது.

இந்த அரசாங்கம் முதல் இரண்டு மாதங்களிலேயே மக்களை ஏமாற்றி விட்டது. 6 மாத இறுதியில் இவர்களின் பொய்யையும் ஏமாற்றுதலையும் மக்கள் நன்கு புரிந்து கொண்டுள்ளனர். இவ்வாறு ஒரு வருடம் கடக்கும் போது மக்களுக்கு இதைவிடவும் உண்மை நிலை புரிய வரும். உண்மை எவ்வளவு விரும்பத்தகாததாக இருந்தாலும், ஐக்கிய மக்கள் சக்தி உண்மைக்காக, மக்களுக்காக, மக்களின் உரிமைக்காக என்றும் முன்நிற்கும். நாட்டு மக்களைப் பாதுகாக்க அர்ப்பணிப்புடன் செயல்படுவோம் என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

சாதாரண மக்களுக்கு என்ன நடந்தாலும், பாதாள உலகத்தினருக்கு மறுமலர்ச்சி உதயமாகியுள்ளது. வேறு வடிவிலான பாதாள உலக நடவடிக்கைகள் தலைதூக்க தற்போதைய அரசாங்கம் இடமளித்துள்ளது. பாதாள உலகத்தின் வேர்களை, துப்பாக்கிதாரிகளின் கடத்தல் கலாச்சாரத்தை, கொலைக் கலாசாரத்தை, மர்மமான முறையில் முன்னெடுத்துச் செல்லும் கலாசாரத்தை

தொடர்ச்சி▼

# பொது மக்கள் எதிர்பார்த்த மறுமலர்ச்சி 'அவுட்'! பாதாள உலகத்திற்கே புதிய மறுமலர்ச்சி யுகம்!!

தொடர்ச்சி▲

மக்கள் விடுதலை முன்னனணியின் தேசபக்தி இயக்கம்தான் நாட்டுக்கு அறிமுகப்படுத்தியது. மக்கள் விடுதலை முன்னனணியினர்தான் துப்பாக்கி அரசியலை, துப்பாக்கி வன்முறைக் கலாசாரத்தை நாட்டிற்கு அறிமுகப்படுத்தினார்கள். இதனை நாட்டு மக்கள் ஒருபோதும் மறந்துவிட மாட்டார்கள். பொது மக்களுக்கான மறுமலர்ச்சி எப்படிப் போனாலும் பாதாள உலகத்திற்கு புதிய மறுமலர்ச்சி யுகம் திசைகாட்டி அரசாங்கத்தால் உருவாக்கப்பட்டுள்ளது.

தீவிர முதலாளித்துவத்தில் இருந்தும், தீவிர சோசலிசக் கொள்கையில் இருந்தும் விலகி மனிதாபிமான முதலாளித்துவத்தை மையமாகக் கொண்ட நடுத்தர பாதையில் பயணிப்பதே ஐக்கிய மக்கள் சக்தியின் கொள்கையாகும். குரோனி முதலாளித்துவ கொள்கைகளை நாம் பின்பற்ற மாட்டோம். மனிதாபிமான முதலாளித்துவத்தின் மூலம் செல்வத்தை உருவாக்கி, சமூக நீதி மற்றும் சமத்துவத்தின் அடிப்படையில் செல்வத்தை பகிர்ந்தளிக்கும் நடைமுறையை ஐக்கிய மக்கள் சக்தி நம்புகிறது. சோசலிச கொள்கைகளைப் பின்பற்றியும் நடைமுறைப்படுத்தியும் தற்போதைய உலக ஒழுங்கில் ஒரு நாட்டை கட்டியெழுப்ப முடியாது. கம்யூனிஸ நாடுகள் எனக் கூறப்படும் சீனாவும் ரஷ்யாவும் கூட இன்று முதலாளித்துவத்தையே கடைப்பிடிக்கின்றன.

உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு நடவடிக்கையில் முந்தைய அரசாங்கம் உழைக்கும் மக்களின் ஊழியர் சேமலாப வைப்பு நிதிகளின் மீதே அதிக அழுத்தத்தைக் கொடுத்தது. வங்கிக் கட்டமைப்புக்கும், கோடீஸ்வரர்களுக்கும் சலுகைகளை வழங்கி, அவர்களை பாதுகாத்து, உழைக்கும் மக்களுக்கு அழுத்தம் கொடுத்தபோது, ஐக்கிய மக்கள் சக்தியே அதற்கு எதிர்ப்பைத் தெரிவித்தது. இந்த லும்பன் வர்க்க முதலாளித்துவத்துக்கு எம்மிடம் இடமில்லை. நாம் அதை எதிர்க்கிறோம். நாட்டின் பொருளாதாரப் பிரச்சினைகளை அரசாங்கத்தின் தலையீட்டினால் மட்டுமே தீர்க்க முடியும் என்று சோசலிசம் நம்பினாலும் அது பொய்யாகும். வடகொரியா, கியூபா போன்று மாற வேண்டும் என்றால் இந்த கொள்கை சரி. ஆனால் சிங்கப்பூர் போன்ற நாடாக மாற வேண்டும் என்றால் இந்த முறை ஏற்புடையதல்ல. - என்று எதிர்க்கட்சித் தலைவர் இங்கு மேலும் சுட்டிக்காட்டினார்.

# பனைசார் உற்பத்தியாளர்களின் நிதி நெருக்கடியைப் போக்க வங்கிகள் ஊடாகக் குறைந்த வட்டியில் கடன் வசதி கிடைக்கும்

## பனை அபிவிருத்திச்சபை நடவடிக்கை எனத் தகவல்





(த.சுபேசன்)

பனைசார் உற்பத்தியாளர்கள் எதிர்நோக்கின்ற நிதி நெருக்கடி நிலைமையைப் போக்குவதற்கு வங்கிகள் ஊடாக அவர்களுக்குக் கடன் வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க பனை அபிவிருத்திச்சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

இது தொடர்பாக பனை அபிவிருத்திச்சபைத் தலைவர் வி.சகாதேவன் கருத்துத் தெரிவிக்கையில் கூறியவை வருமாறு:-

பதனீர் உற்பத்தியாளர்கள், கைப்பணியாளர்கள் உள்ளிட்ட பனைசார் உற்பத்தியாளர்கள் எதிர்நோக்கி வருகின்ற நிதித் தேவைகளை நிவர்த்தி செய்யும் விதத்தில் அண்மையில் வங்கிகளுடன் சந்திப்பு ஒன்று மேற்கொள்ளப்பட்டது.

அதன் முதற்கட்டமாக இலங்கை வங்கி மற்றும் கொமர்ஷல் வங்கி அதிகாரிகளுடன் தனித்தனியே பனை அபிவிருத்திச்சபை சந்திப்பை ஏற்படுத்தி சாதகமான முடிவையும் பெற்றுள்ளது.

இதன்போது பனைசார் உற்பத்தியாளர்கள் எதிர்நோக்கி வருகின்ற நிதித் தேவைகளுக்கான கடன் வசதிகளை வழங்க வங்கிகள் இணக்கம் தெரிவித்துள்ளன. அத்தோடு குறைந்த வட்டி விகிதத்தில் கடனை பெற்றுக் கொடுக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதனூடாக உற்பத்தியாளர்களுடைய நிதி நெருக்கடி நிலைமை தீர்க்கப்படுவதுடன் எதிர்கால தேவை கருதிய அதிக உற்பத்திகளை மேற்கொள்வதற்கான வாய்ப்பும் ஏற்பட்டுள்ளது.

இவ்வாறான ஒரு நடவடிக்கையை பனை அபிவிருத்திச்சபை முதற்தடவையாக மேற்கொண்டுள்ளது.

இதில் குறிப்பாக பெண் தொழில் முனைவோருக்கு அதிக முக்கியத்துவம் வழங்கப்படும்.

இத்திட்டம் பனை சார்ந்த உற்பத்திகளில் ஈடுபடும் பெண் தொழில் முனைவோருக்கு நிச்சயமாகக் கைகொடுக்கும்.

பொருத்தமான பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு கடனுதவி வழங்கப்படும். இதன்போது இரண்டு லட்சம் ரூபா வரை கடனுதவிகளை பெற முடியும். - எனவும் மேலும் அவர் தெரிவித்தார்.



# 10 லட்சம் குற்றவாளிகளின் கைவிரல் அடையாளங்கள் டிஜிட்டல் மயமாக்கம்

நாட்டிலுள்ள சுமார் 10 லட்சம் குற்றவாளிகளின் கைவிரல் அடையாளங்கள் டிஜிட்டல் மயமாக்கப்பட்டுள்ளன.

நீதிமன்றங்களின் ஊடாக குற்றவாளிகள் என அறிவிக்கப்பட்டவர்களின் கைவிரல் அடையாளங்கள் டிஜிட்டல் மயமாக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் குற்றப்பிரிவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கையின் ஊடாக குற்றவாளி ஒருவர் மீண்டும் குற்றம் புரிந்தால் மிகக்குறுகிய நேரத்தில் அவரது தகவல்களை பெற்றுக்கொள்ள முடியுமென பொலிஸார் தெரிவித்தனர்.

2013 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட டிஜிட்டல் மயமாக்கத்தினூடாக பல குற்றவாளிகள் இதுவரை அடையாளம் காணப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

இதனைத் தவிர குற்றவாளிகளின் முகங்களை அடையாளங்காணும் தொழில்நுட்ப ரீதியான நடவடிக்கைகளையும் முன்னெடுத்துள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

எதிர்காலத்திலும் தொழில்நுட்பத்தை பயன்படுத்தி குற்றவாளிகளை கண்டறியும் நடவடிக்கைகளை தீவிரப்படுத்த எதிர்பார்ப்பதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.



# முப்படையிலிருந்து தப்பிச் சென்ற 1,843 பேர் கைது செய்யப்பட்டனர்

முப்படையிலிருந்து தப்பிச் சென்ற 1,843 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்

முப்படையிலிருந்து தப்பிச் சென்ற உறுப்பினர்களை உடனடியாக கைது செய்யுமாறு பாதுகாப்பு செயலாளர் எயார் வைஸ் மார்ஷல் சம்பத் துய்யகொந்தவினால் கடந்த மாதம் 24 ஆம் திகதி உத்தரவிடப்பட்டது.

இந்த உத்தரவிற்கமைய முப்படையிலிருந்து தப்பிச் சென்றவர்களை கைது செய்வதற்கான நடவடிக்கைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.



# 3 மாதங்களில் 27 துப்பாக்கிச்சூட்டு சம்பவங்கள்; 22 பேர் உயிரிழப்பு

இந்த வருடத்தின் இதுவரையிலான காலப்பகுதியில் பதிவான 27 துப்பாக்கிச்சூட்டு சம்பவங்களில் 22 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

இவற்றில் 18 துப்பாக்கிச்சூட்டு சம்பவங்களுடன் திட்டமிட்ட குற்றச்செயல்களில் ஈடுபடும் குழுக்கள் தொடர்புபட்டுள்ளன என பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன் வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகி 13 பேர் காயமடைந்துள்ளனர்.

இவர்களில் 08 பேர் திட்டமிட்ட குற்றச்செயல்களில் ஈடுபடும் குழுக்களால் நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டில் காயமடைந்துள்ளனர்.

# தெவிநுவர இரட்டை கொலை; இதுவரையில் நால்வர் கைது

தெவிநுவர – சிங்ஹாசன வீதியில் இடம்பெற்ற இரட்டைக் கொலை தொடர்பில் இதுவரை நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களின் பெண்ணொருவரும் உள்ளடங்குகிறார் என பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர்கள் கந்தர மற்றும் தெவிநுவர பகுதிகளைச் சேர்ந்த 23 முதல் 46 வயதுக்கிடைப்பட்டவர்கள் என பொலிஸார் குறிப்பிட்டனர்.

மோட்டார் சைக்கிளில் பயணித்துக்கொண்டிருந்த இரு இளைஞர்களை இலக்கு வைத்து நேற்று முன்தினம் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டது.

## நாக்பூர் வன்முறை:

# 6 நாள்களுக்குப் பின்னர் ஊரடங்கு உத்தரவு நீக்கம்

மகாராஷ்டிராவின் மத்திய நாக்பூரில் வன்முறை நடந்து ஆறு நாள்களுக்குப் பின்பு மீதமுள்ள நான்கு இடங்களில் இருந்தும் ஊரடங்கு உத்தரவு நேற்று திரும்பப் பெறபட்டுள்ளது என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மகாராஷ்டிராவின் சத்ரபதி சம்பாஜி நகர் மாவட்டத்தில் உள்ள முகலாய மன்னர் அவுரங்கசீப் கல்லறையை அகற்ற வேண்டும் எனக்கோரி விஹெச்பி மற்றும் பஜ்ரங் தளம் தலைமையில் வலதுசாரி அமைப்புகள் மார்ச் 17 ஆம் திகதி ஆர்ப்பாட்டம் நடத்தின. இந்த ஆர்ப்பாட்டத்தில் புனித எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட சதார் எரிக்கப்பட்டதாக வதந்தி பரவியது. இதனைத் தொடர்ந்து மத்திய நாக்பூர் பகுதிகளில் அன்று இரவு வன்முறை ஏற்பட்டது.

இதனைத் தொடர்ந்து கோட்வாலி, கணேஷ்பேத், தேஹ்சில், லகட்கஞ்ச், பச்பாலி, சாந்திநகர், சக்கர்தாரா, நந்தன்வன், இமாம்பாடா, யசோதரா நகர் மற்றும் கபில் நகர் காவல்நிலைய பகுதிகளில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தன.

இந்நிலையில், கடந்த மார்ச் 20 திகதி நந்தன்வன் மற்றும் கபில்நகர்



காவல்நிலையப் பகுதிகளில் ஊரடங்கு உத்தரவு நீக்கப்பட்டது. தொடர்ந்து மார்ச் 22 ஆம் திகதி பச்பாலி, சாந்தி நகர், லகட்கஞ்ச், சக்கர்தாரா மற்றும் இமாம் பாடா காவல்நிலையப் பகுதிகளில் ஊரடங்கு நீக்கப்பட்டது.

இதனிடையே, நாக்பூர் காவல் ஆணையர் ரவிந்தர் சிங்கால் மீதமுள்ள கோச்வாலி, தேஹ்சில், கணேஷ்பேத் மற்றும் யசோதரா காவல்நிலையப் பகுதிகளில் அமலில் இருந்த ஊரடங்கை நேற்று நேற்று பிற்பகல் 3 மணி முதல் நீக்க உத்தரவிட்டார். என்றாலும் பதற்றமான பகுதிகளில் உள்ளூர் பொலிஸின் உதவியுடன் ரோந்து பணிகள் தொடரும் என்று அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மார்ச் 17 அன்று நடந்த வலதுசாரிகள் ஆர்ப்பாட்டத்தில் சதார் எரிக்கப்பட்டதாக பரவிய வதந்தியைத் தொடர்ந்து நாக்பூரின் பல பகுதிகளில் மிகப்பெரிய அளவில் கல்வீச்சு மற்றும் தீ வைப்புச் சம்பவங்கள் நடந்தன. அந்த வதந்தி ஆதாரமற்றது என்றும் அது வேண்டுமென்றே பரப்பப்பட்டது என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

நாக்பூர் வன்முறையில் மூன்று இணை ஆணையருக்கு நிகரான அதிகாரிகள் உட்பட 33 பொலிஸார் காயம் அடைந்தனர். இந்த வன்முறை தொடர்பாக பொலிஸார் இதுவரை 100க்கும் அதிகமானவர்களைக் கைது செய்துள்ளனர்.

இதனிடையே மாநில முதல்வர் தேவேந்திர பட்னாவிஸ் கூறுகையில், "சமீபத்திய நாக்பூர் வன்முறையின் போது சேதமான பொருள்களுக்கான தொகைகள் வன்முறையாளர்களிடம் இருந்து இழப்பீடாக வசூலிக்கப்படும். தேவைப்பட்டால் புல்டோசர் நடவடிக்கையும் மேற்கொள்ளப்படும்.

வன்முறையாளர்கள் இழப்பீடு தரத் தவறினால் அவர்களின் சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட்டு அதனை விற்று அந்த தொகை ஈடுகட்டப்படும். வன்முறையின் போது பொலிஸார் மீது தாக்குதல் நடத்தியவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்." என்று தெரிவித்திருந்தார்.

# அரச பணியாளர்கள் நடாத்தும் போராட்டத்துக்கு த.வெ.க. ஆதரவு

அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் மற்றும் அரசுப் பணியாளர்களின் ஜாக்டோ ஜியோ கூட்டமைப்பின் போராட்டத்துக்கு தமிழக வெற்றிக் கழகத்தின் சார்பாக, முழுமையான மனப்பூர்வமான ஆதரவைத் தெரிவித்துக்கொள்வதாக அதன் தலைவர் விஜய் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

"அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் மற்றும் அரசுப் பணியாளர்கள், பழைய ஓய்வூதியத் திட்டத்தை அமல்படுத்துதல், உயர்கல்வி சார்ந்த ஊக்க ஊதிய உயர்வு, முடக்கி வைக்கப்பட்ட சரண் விடுப்பு ஒப்படைப்பு, ஊதிய முரண்பாடுகளைக் களைதல், பணி உயர்வு கோருதல், சத்துணவு, அங்கன்வாடி பணியாளர்கள், வருவாய் கிராம உதவியாளர்கள், கல்வித் துறையில் பணியாற்றும் துப்புரவுப் பணியாளர்கள், ஆசுட செவிலியர்கள், ஊராட்சிச் செயலாளர்கள், ஊர்ப்புற நூலகர்கள், கணினி உதவியாளர்கள், சிறப்பு ஆசிரியர்கள், பல்நோக்கு மருத்துவமனைப் பணியாளர்கள் உள்ளிட்டோருக்கு வரையறை செய்யப்பட்ட ஊதியம் வழங்குதல், ஒருங்கிணைந்த கல்வித் துறையில் பணியாற்றும் பணியாளர்கள், ஆசிரியர்கள், தொழிற்கல்வி ஆசிரியர்கள் மற்றும் பகுதிநேர ஆசிரியர்கள் ஆகியோருக்குப் பணி நிரந்தரம் செய்தல், அரசின் பல்வேறு துறைகளிலும் உள்ள காலிப் பணியிடங்களைக் காலமுறை ஊதியத்தில் நிரப்புதல் உள்ளிட்ட பத்து அம்சக் கோரிக்கைகளை வலியுறுத்தி, ஜாக்டோ ஜியோ கூட்டமைப்பின் மூலம் நீண்ட காலமாகப் போராடி வருகின்றனர்.

ஜாக்டோ ஜியோ போராட்டம் என்பது, தமிழகத்தில் வாழ்ந்து வரும் லட்சக்கணக்கான குடும்பங்களின் நல்வாழ்வு மற்றும் வாழ்வாதாரம் சார்ந்த போராட்டமாகும். இதை அரசியல் கண்கொண்டோ, ஆட்சி அதிகாரக் கண்கொண்டோ நோக்கவே கூடாது. லட்சக்கணக்கான குடும்பங்களை மனத்தில் வைத்து, முற்றிலும் மனிதாபிமான அடிப்படையில் மட்டுமே அணுக வேண்டும்.

அரசு எந்திரத்தின் நிர்வாக முறை அச்சாணியான அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் மற்றும் அரசுப் பணியாளர்களின் கோரிக்கைகளுக்குச் செவிசாய்த்து, அதற்கான நியாயமான தீர்வுகளைக் காண வேண்டியது அரசின் கடமை. ஆனால், அதை இப்போது இருக்கும் வெற்று விளம்பர மொடல் தி.மு.க. அரசு செய்ய முன்வரவில்லை. அதை விடுத்து, கண்துடைப்புக்காகப் பேச்சுவார்த்தை மட்டும் நடத்திவிட்டு, கண்டும் காணாமல் கை விட்டுவிட்டது.

2021 ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலுக்காக மட்டும் ஜாக்டோ ஜியோ கூட்டமைப்பைக் கெஞ்சிக் கூத்தாடியும், பழைய ஓய்வூதியத் திட்டத்தை ஆட்சிக்கு வந்ததும் அமல்படுத்துவோம் என்றும் கூறி, தேர்தல் அறிக்கையிலும் 309ஆவது வாக்குறுதியாக வெளியிட்டு நம்பிக்கையை ஏற்படுத்திவிட்டு, இப்போது அவர்கள் கோரிக்கையை



நிறைவேற்றாமல் லட்சக்கணக்கான குடும்பங்களை இந்தத் தி.மு.க. அரசு ஏமாற்றி உள்ளது.

பழைய ஓய்வூதியத் திட்டமானது ராஜஸ்தான், மேற்கு வங்கம், ஜார்க்கண்ட், சத்தீஸ்கர், பஞ்சாப், இமாச்சலப் பிரதேசம் ஆகிய ஆறு மாநிலங்களில் மீண்டும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. கர்நாடக அரசும் அதை மீண்டும் கொண்டு வரப் போவதாக அண்மையில் அறிவித்துள்ளது.

தற்போதைய ஆளும் தி.மு.க. அரசுக்கு, இது ஒரு பொருட்டாகவே படவில்லை என்பதும் வெளிப்படையாகத் தெரிகிறது. இதுபோன்ற பாராமுகச் செயல்களால், அரசு மீதும் அரசியல்வாதிகள் மீதும் நம்பிக்கை இழந்து, கையறு நிலையில் உள்ள லட்சக்கணக்கான குடும்பங்களின் நலன்களை ஆழமாக மனத்தில் வைத்து, அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் மற்றும் அரசுப் பணியாளர்களின் ஜாக்டோ ஜியோ கூட்டமைப்பின் போராட்டத்திற்குத் தமிழக வெற்றிக் கழகத்தின் சார்பாக, முழுமையான மனப்பூர்வமான ஆதரவைத் தெரிவித்துக் கொள்கிறேன்" என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இஸ்ரேல் - ஹமாஸ் போரில் 50,000 பாலஸ்தீனியர்கள் பலி



இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் அமைப்பினருக்கு இடையேயான போர் தொடங்கியதிலிருந்து இதுவரை 50,000 பாலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

காசாவின் சுகாதார அமைச்சு இதனை அறிவித்துள்ளது.

# இஸ்ரேல் — காசா போரை நிறுத்த வலியுறுத்தி ஐரோப்பிய நாடுகளில் வலுக்கும் போராட்டம்




இஸ்ரேல் – காசாவுக்கு இடையிலான போரை முடிவுக்குக் கொண்டுவர வலியுறுத்தி ஐரோப்பிய நாடுகளில் போராட்டம் வலுத்து வருவதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

லண்டன், ஸ்பெயின்ஸ், பிரான்ஸ், சுவீடன் உள்ளிட்ட நாடுகளில் ஏராளமான மக்கள் அந்நாட்டுக் கொடிகளை ஏந்தி தூதரகங்களை முற்றுகையிட்டு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

அந்த வகையில், ஸ்பெயின் நாட்டின் சான்செபாஸ்டியன் நகரில், பலஸ்தீன மக்கள் மீது நடத்தப்படும் படுகொலைக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்ற கோரிக்கையை எழுப்பி பேரணியில் மக்கள் ஈடுபட்டுள்ளனர்.

அதேநேரம், பலஸ்தீன கொடிகளை ஏந்தியவாறு பிரான்ஸில் இசை வாத்தியங்கள் முழங்க மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

அத்துடன், லண்டனிலும் ஏராளமான மக்கள் கூடி முழக்கங்களை எழுப்பிப் போராடுவதுடன் இஸ்ரேலுக்கு ஆயுத விநியோகத்தை நிறுத்த வேண்டும் என்று தூதரகத்தை அவர்கள் முற்றுகையிட்டுள்ளனர்.

மேலும், சுவீடனில் வீதிகளில் குவிந்த மக்கள் காசா மக்களுக்கு ஆதரவாக பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

# சிகிச்சைக்குப் பின் பொது வெளியில் தோன்றினார் பாப்பரசர் பிரான்சிஸ்!

இத்தாலியின் ரோமில் உள்ள வைத்தியசாலையொன்றில் சிகிச்சை பெற்று வந்த பாப்பரசர் பிரான்சிஸ் நேற்று சிகிச்சை நிறைவடைந்து அங்கிருந்து வெளியேறியுள்ளார் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

வைத்தியசாலையில் இருந்து வீடு திரும்புவதற்கு முன்பு நேற்று முதல் முறையாக பொது வெளியில் தோன்றினார்.

88 வயதான பாப்பரசர் பிரான்சிஸ் கடந்த பெப்ரவரி மாதம் 14 ஆம் திகதி கடுமையான சுவாச தொற்று காரணமாக இத்தாலியின் ரோமில் உள்ள வைத்தியசாலையொன்றில் அனுமதிக்கப்பட்டார்.



சுவாச தொற்றின் விளைவாக அவருக்கு நியூமோனியா நோய் நிலைமை ஏற்பட்டது.

சுமார் 5 வாரங்களாகச் சிகிச்சை பெற்றுவந்த அவர் ஆபத்தான கட்டத்திலிருந்து விடுபட்டுள்ள நிலையில் வைத்தியசாலையிலிருந்து வெளியேறியுள்ளார்.

# இன்றைய ராசி பலன்கள் - 24.03.2025




இன்று அனுகூலமான நாளாக இருக்கும். இன்று சிறந்த பலன்கள் காணப்படும். உங்கள் விருப்பங்கள் நிறைவேறும் வாய்ப்பு உள்ளது. முக்கிய முடிவுகள் எடுக்க இன்று உகந்த நாள்.

உங்களிடத்தில் காணப்படும் அசாதாரணமான திறமை காரணமாக பணியிடத்தில் சிறப்பான வளர்ச்சி காணப்படுகின்றது. இதன் மூலம் உங்கள் திறமைக்கு பாராட்டுக் கிடைக்கும்.

உங்கள் துணையுடன் ஒட்டுதலை வளர்த்துக் கொண்டு ஒட்டி உறவாடுவதன் மூலம் நல்லுறவை பராமரிக்கலாம். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்கும். உங்கள் சேமிப்பு ஆற்றல் அதிகரிக்கும். உங்கள் கையிலுள்ள பணத்தை பயனுள்ள வகையில் செலவு செய்வீர்கள்.




இன்று உங்களுக்கு சாதகமான நாள். உங்கள் தன்னம்பிக்கை அதிகமாக காணப்படும். முடிவுகள் எடுப்பதில் திடமாக இருப்பீர்கள்.

பதவி உயர்வு வகையில் பாராட்டு கிடைக்கும். உங்கள் திறமை மேலதிகாரிகளின் கவனத்தை ஈர்க்கும்.

உங்கள் துணையுடன் இனிமையான வார்த்தைகளை பகிர்ந்து கொண்டு இருவரும் மகிழ்வீர்கள். வெளியிடங்களுக்கு சென்று உங்களின் தரமான நேரத்தை கழிப்பீர்கள்.

உங்கள் கடின உழைப்பின் மூலமாக ஊக்கத்தொகை அல்லது சலுகை வகையில் கூடுதல் பண வரவு கிடைக்க வாய்ப்புள்ளது.

நீங்கள் சிறந்த ஆற்றலுடன் காணப்படுவீர்கள்.




உடல் ஊனமுற்றோர் அல்லது நோயாளிகளுக்கு தொண்டு செய்வதன் மூலம் இன்றைய நாளை உங்களுக்கு சாதகமாக ஆக்கிக் கொள்ளலாம். உங்கள் இலக்குகளை அடைவதில் தாமதம் ஏற்படும்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். சவாலான சூழல்களை நீங்கள் சமாளிக்க வேண்டும்.

குடும்ப பிரச்சினை பற்றி உங்கள் துணையுடன் வாக்குவாதத்தில் ஈடுபடுவீர்கள். இதனால் உறவில் முரண்பாடு ஏற்படும்.

பணம் அதிக அளவில் காணப்படாது. மருத்துவ செலவுகள் தவிர்க்க முடியாததாக இருக்கும்.

இன்று தோல் எரிச்சல்கள் காணப்படலாம். எண்ணெய் மற்றும் கார உணவுகளை தவிர்க்கவும்.




இன்று சில சௌகரியங்களை இழக்க நேரலாம். இன்று கடினமாக உழைக்க வேண்டும். உங்கள் தந்தையுடன் கருத்து வேறுபாடு காணப்படும். ஆன்மீக ஈடுபாடு அமைதியை அளிக்கும்.

உங்கள் பணிகளை ஒழுங்கமைத்து பணியாற்ற சிறப்பாக திட்டமிட வேண்டும். நீங்கள் சிறந்த பலன் பெற இன்று கவனமுடன் பணியாற்ற வேண்டும்.

நீங்கள் உங்கள் துணையிடம் உணர்ச்சிகரமாக நடந்துகொள்வீர்கள். இந்தப் போக்கு உறவின் புரிந்துணர்வை பாதிக்கும்.

உங்கள் கடின உழைப்பிற்கு ஊக்கத்தொகை அல்லது சலுகை வகையில் பணம் கிடைக்கும். என்றாலும் சேமிக்கும் ஆற்றல் குறைந்து காணப்படும்.

அதிக வேலை காரணமாக பதட்டமும் மூட்டுகளில் வலியும் ஏற்படலாம். இசையைக் கேட்பதன் மூலம் ஆறுதல் பெறலாம்.




உங்களின் சிறந்த தகவல் பரிமாற்ற திறன் மூலம் நீங்கள் சாதிப்பீர்கள். இன்று நம்பிக்கையான மனநிலையும் உறுதியும் உங்களிடம் காணப்படும். முக்கிய முடிவுகள் எடுப்பதற்கு இன்றைய நாளை நீங்கள் பயன்படுத்திக் கொள்ளலாம்.

உங்கள் சிறந்த பணிக்கு நற்பெயர் பெறுவீர்கள். உங்கள் திறமை உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும். உங்கள் தனித்த திறமைகளை வெளிப்படுத்துவீர்கள்.

உங்கள் துணையிடம் நேர்மையாக உங்கள் உணர்வுகளை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

உங்கள் கடின உழைப்புக்கு ஊக்கத்தொகை கிடக்கும். இது உங்களுக்கு மிகுந்த திருப்தியை அளிக்கும்.




இன்றைய சவால்களை எதிர்கொள்ள நீங்கள் பொறுமையாக இருக்க வேண்டும். மகிழ்ச்சியாக இருக்க இசை மற்றும் பொழுதுபோக்கு விஷயங்களில் ஈடுபடுங்கள்.

உங்கள் பணிகளை மேற்கொள்வதில் சில போராட்டங்களை எதிர்கொள்வீர்கள். அதிகப் பணிகள் காணப்படும். தவறுகள் நேராமல் இருக்க பணிகளை திட்டமிட்டு செயலாற்ற வேண்டும்.

உங்கள் துணையுடன் திருப்திகரமான உறவுநிலை காணப்படாது. வேறுபாட்டைகளைய இருவரும் மனம் திறந்து பேசுவது நல்லது.

இன்று பணப்பற்றாக்குறை காணப்படும். செலவுகள் அதிகமாக காணப்படும்.

உங்கள் தாயின் உடல் நலத்திற்காக பணம் செலவு செய்ய நேரும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.




இன்று சவால்கள் நிறைந்திருக்கும். உங்கள் வளர்ச்சியில் தடைகளை சந்திப்பீர்கள். உங்கள் இலக்குகள் நோக்கி செயல்பட வேண்டும். பெரிய அளவில் சிந்தனையை ஏற்படுத்திக் கொண்டு விரும்பிய பலன்களை அடைய வேண்டும்.

பணியில் சிறிது மந்தநிலை காணப்படும். உங்கள் பணிகளை திறமையாக ஆற்றுவதில் தைரியம் இழந்து காணப்படுவீர்கள். நம்பிக்கையுடன் செயல்பட்டு உங்கள் மேலதிகாரிகளின் நன்மதிப்பை பெறுங்கள்.

உங்கள் பேச்சில் கட்டுப்பாட்டை இழக்க வாய்ப்புள்ளது. எனவே உங்கள் துணையுடனான அணுகுமுறையில் பொறுமை தேவை. நட்புடன் பழக முயலவும்.

பூர்வீக சொத்து மூலமாக பண வரவு ஏற்படும்.




உங்கள் வளர்ச்சியில் தடைகள் காணப்படும். இன்று வெற்றி பெறுவதற்கு திட்டமிட வேண்டும். பதட்டப்படாமல் கட்டுப்பாட்டுடன் உங்கள் செயல்களை செய்ய வேண்டும்.

உங்கள் கடினமான பணிகளைகூட எளிதாக முடிப்பீர்கள். விரும்பி பணியாற்ற முயல்வதன் மூலம் பணிகளை குறித்த நேரத்தில் முடிக்க இயலும்.

உங்கள் துணையின் விருப்பபடி நடந்துகொள்ள முயற்சி செய்யுங்கள். வெளியிடங்களுக்கு அழைத்துச் சென்று சமாதனப் படுத்துங்கள். இதனால் இருவருக்குமிடையிலான உறவு மேம்படும்.

வங்கியில் போதுமான பண இருப்பு பராமரிக்க இயலாது. தவிர்க்க முடியாத செலவுகள் செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்படும்.

# இன்றைய ராசி பலன்கள் - 24.03.2025




இன்று நீங்கள் உயர்ந்த நிலையை அடைவீர்கள். உங்கள் திறமைகளை வெளிபடுத்த நம்பிக்கையான வாய்ப்புகள் கிடைக்கும். நீங்கள் உறுதியுடன் காணப்படுவீர்கள்.

உங்கள் சகபணியாளர்களின் ஆதரவு கிடைக்கப் பெறுவீர்கள். பணியிடச் சூழல் சிறப்பாக இருக்கும். உங்கள் பணிகளை குறித்த நேரத்துக்கு முன்பே முடித்து விடுவீர்கள்.

உங்கள் துணையுடன் அமைதியாகப் பழக வேண்டும். இதன் மூலம் இருவரின் உறவுப் பிணைப்பு வலுப்படும்.

நிதிநிலை மகிழ்ச்சிகரமாகவும் பாதுகாப்பாகவும் காணப்படும். உங்கள் பாதுகாப்பிற்கு தேவையான பணம் கிடைக்கும்.

உங்களிடம் மிகுந்த ஆற்றல் காணப்படும்.




இன்றைய நாள் சாதகமான பலன்களை அளிக்காது. இன்று வளர்ச்சி காண கடினமாக உழைக்க வேண்டும். உங்கள் வளர்ச்சியை பாதிக்கும் வகையில் தகவல் பரிமாற்ற பிரச்சினை காணப்படும். பதற்றத்தை தவிர்க்கவும்.

பணியிடச் சூழல் உங்கள் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் மகிழ்ச்சி கரமாக இருக்காது. பணியில் வளர்ச்சி காண கூடுதல் முயற்சி தேவை.

உங்கள் துணையிடம் சிறிய விஷயங்களையும் பெரிதாக எடுத்துக் கொள்ள முனைவீர்கள். இதனால் இருவரிடையிலான உறவில் மகிழ்ச்சி குறையும்.

நிதி வளர்ச்சி மகிழ்சிகரமாக இருக்காது.வரவுக்கும் செலவுக்குமான சமநிலையை பராமரிப்பது கடினமாக இருக்கும்.




இன்று நீங்கள் மும்மரமாக செயல்படும் சூழ்நிலை காணப்படும். உங்கள் இலக்குகளை எளிதில் அடைவீர்கள். இன்று முக்கிய முடிவுகளை எடுக்கலாம்.

பணியிடத்தில் நற்பெயர் எடுக்க வாய்ப்புள்ளது. கடினமான பணிகளையும் இன்று எளிதாக செய்து முடிப்பீர்கள்.

உங்கள் துணையுடன் அனுசரித்து நடந்துகொள்ள வேண்டும். இதன் மூலம் இருவரிடையே நல்லுறவும் மகிழ்ச்சியும் ஏற்படும்.

நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்கும். பணம் அதிகமாக இருக்கும். இது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.

இன்று நிறைந்த ஆற்றலும் சிறந்த ஆரோக்கியமும் காணப்படும். நீங்கள் திடமாக இருப்பீர்கள்.




இன்றைய கடினமான சூழ்நிலைகளை அமைதியாக சமநிலை உணர்வுடன் சமாளித்தால் சிறந்த பலன் கிடைக்கும். இன்று அனுசரித்து நடந்து கொள்ளவேண்டும். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

உங்கள் கீழ் பணிபுரிபவர்களிடம் மோதல்கள் காணப்படும். சுமூகமாக பணியாற்ற உங்கள் பதற்றத்தை கட்டுப்படுத்த வேண்டும்.

உங்கள் துணையிடம் அகந்தைப் போக்கை தவிருங்கள்.இதன் மூலம் உறவில் மகிழ்ச்சி அதிகரிக்கும்.

இன்று செலவுகள் அதிகமாக இருக்கும். பணத்தில் ஸ்திரத்தன்மை பாதுகாக்க சிக்கனப்படுத்தி பணத்தை சேமிக்க வேண்டும்.

ஆரோக்கியமாய் இருக்க ஆரோக்கிய உணவை உண்ண வேண்டும்.

# சாவகச்சேரியில் தமிழரசுக் கட்சியின் வேட்பாளர்கள் அறிமுக நிகழ்வு நேற்று

2025 ஆம் ஆண்டு உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி சார்பாக போட்டியிடும் வேட்பாளர் அறிமுக நிகழ்வு நேற்றைய தினம் சாவகச்சேரி ஐங்கரன் திருமண மண்டபத்தில் இடம்பெற்றது.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் சாவகச்சேரித் தொகுதிக்கிளைத் தலைவர் சட்டத்தரணி கேசவன் சயந்தன் தலைமையில் பிற்பகல் 4.மணிக்கு இடம்பெற்ற நிகழ்வில் சாவகச்சேரித் தொகுதிக்கிளைக்கு உட்பட்ட நகரசபை மற்றும் பிரதேச சபையில் போட்டியிடும் வேட்பாளர்கள் கலந்து கொண்டு தம்மை அறிமுகம் செய்திருந்தனர்.

மேலும் இந்த நிகழ்வில் கட்சி நிர்வாகத்தினர்,உறுப்பினர்கள்,கட்சித் தொண்டர்கள், நலன் விரும்பிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.







